Registered as a News Paper in Ceylon
P. M. G- No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி (1889) ஆவணியீ 28 ஆரம்பமான

வெள்ளி தோறும் வெளி வருவது

தனிப்பிரதி: சதம் 1

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஅ]  பார்ப்பானர்:-  துன்முகி வூ சித்திரை மீ உகவ வெள்ளிக்கிழமை (11 MAY. 1956)  [இல - (

# தூதுவரின் தூய தன்மை

## உண்மை உரைத்தலும் உறுதியும் வேண்டும்

---0---

பண்டைத் தமிழர் தம் வாழ்க்கையில் தூதுவர் பெரிதும் இடம்பெற்றிருந்தனர். இரு பெரும் அரசுகளில் சமாதானம் நிலவவும், ஒன்றற்கொன்று துணையாக இருக்கவும் தூதுவர் பெரிதும் உதவினர். தூதுவரின் இன்றியமையாமையை நோக்கிப் போலும் வள்ளுவர் அங்கவியலில் 'தூது' என்று ஓர் அதிகாரத்தைச் சேர்த்துள்ளார்.

தூதுவர் பல வகையாகப் பயன்படுத்தப்பட்டனர். கணவனுக்கும் மனைவிக்கும் பல்வேறு காரணங்களால் ஏற்பட்ட ஊடலைத் தீர்க்க தூதுவர் உதவினர். பாணன் முதலியோர் இவ்வகையான ஊடலைத் தீர்ப்பதற்கு வாயில்களாக உதவினர். சுந்தரமூர்த்தி நாயனர் தன்மனைவியராகிய பரவையாரின் ஊடலைத் தீர்ப்பதற்கு இறைவனையே தூதுசெல்ல வைத்தார். நாயனர் பாடும் இனிய தேவாரங்களுக்குக் கட்டுண்டே இறைவன் தூதுவரானர். அதனுலே 'தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்த' தமிழ் எனப் போற்றப்படுகிறது.

தூது என்ற ஒரு பிரபந்தம் தமிழிலே காணப்படுகின்றது. இதுதாம் காதல் கொண்டார்மாட்டு பாணன் முதலியோரையாவது, வண்டு, கிள்ளை, முகில் முதலிய அஃறிணைப் பொருள்களையாவது தூது விடுவதாகக் கூறப்படுவது. ஆரியத்திலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட மேகதூதம் இப் பிரபந்த வகையைச் சார்ந்தது. தேவாரப் பதிகங்களிலும் கிள்ளை முதலியவற்றை இறைவனிடம் தூதுவிடுவதாக ஒரு சில பாட்டுகள் காணப்படுகின்றன.

பாரதம் இராமாயணம் ஆகிய இதிகாசங்களிலேயும் கந்தபுராணத்திலும் நாம் வள்ளுவர் வாக்கிற்கு அமைந்த சிறப்பான தூதுவர்களைப் பார்க்கிறோம். "தூது செல்கின்ற ஒருவனுக்குப் பகைவனையும் அருளோடு நோக்குந்திறன் வேண்டும்" என்பது வள்ளுவர் பேசும் ஒரு பண்பு. சூரபன்மன் தேவரைச் சிறைசெய்தான். அறுமுகப்பெருமான் அவர்களை விடுவிக்கத் திருவுள்ளம் கொண்டார். சூரபன்மன் முதலியோரோ கொடியர்கள். அவர்களைத் தண்டிப்பதுதான் முறை. ஆனல் தேவர் சிறையை விட்டு உய்யுமாறு வீரவாகு தேவரைத் தூதனுப்புகிறார். வீரவாகுதேவர் ஒரு சிறந்த தூதுவர். மாற்றாரிலும்

ஸ்ரீ வ. குகசர்மா

அருள்குன்றா மாண்புடையர். சூரன் திருவுடன் வைகும் வீரமகேந்திரம் செல்கிறார். சூரனுடைய செல்வத்தைப் பார்க்கிறார். ஆத்திரத்துக்குப் பதிலாய் இரக்கம் உண்டாகின்றது. வேள்ள்வித் தீயிலேஇறந்து பின்பு சிவபெருமானின் அருளிலுலே எழுந்து இச்செல்வமெல்லாம் பெற்றான் இச்சூரபன்மன். ஆனல் இச்செல்வம் அழியாதிருக்கும்படி நினைக்கவில்லையே. இதுதானு விதி என்றுநினைத்து இரக்கப்படுவதாகப் புலவர் கூறுகிறார்.

"பாடுறு வேள்வி பயின்றழல் புக்கும்
பீடுறு மிவ்வள மாயின பெற்றும்
நீடுறுமாறு நினைந்திலன் வெய்யோன்
வீடுறுகின்ற விதித்திறனன்றோ"

என்பது புலவர் காட்டும் வீரவாகு தேவரின் மனநிலை.

சிலரிடம் சென்று அவர்கள் உய்யுமாறு எவ்வித புத்தி சொன்னாலும் கேட்க மாட்டார்கள். இவர்களை உவர் நிலத்திற்கு ஒப்பிட்டார் வில்லிபுத்தூரர். அவ்வாறு அவர் கூறிய உவர் நிலம் துரியோதனன்மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத கண்ணபிரானே தூதாகச் சென்றும் அவன் தான் பிடித்த பிடியினின்

தொடர்ச்சி 6ம் பக்கம்

அரசியல் அலை

# ஸ்ரீ இலங்கா விடுதலைக் கட்சியின் திமிர்!

## தமிழை ஒடுக்குவதிலே தாமதம் என்று சச்சரவு!!

ஏனைய கட்சிகளின் 'தனிச்சிங்கள வெறி' போதாதென்று களனியிற் கனந்து சினந்த ஐ. தே. கட்சி அதோகதி அடைந்ததை இந்த மக்கள் ஐக்கிய முன்னணியார் சற்று ஆராந்து பார்த்தால் இந்தவிதமாக நாவில் எழுந்தபடி பேச மாட்டார்கள்.

ஐ. தே. கட்சி அடிவேர் ஒன்று தவிர மற்றும்படி சாய்ந்து விழுந்ததற்குக் காரணம் மக்கள் ஐக்கிய முன்னணியின் தத்துவம் அல்ல. கடவுள் நீதியின் தீர்ப்பே. இதை உணராமல் சிறி இலங்காவிடுதலைக் கட்சியார் சீறுகின்றார்கள், சினக்கிறார்கள், துள்ளித் துள்ளிக் குதிக்கின்றார்கள். தங்கள் தங்கள் வீட்டிலே தமிழைப் பேசவுரிமையுண்டு என்ற வகையிலே பிரதமர் பண்டாரநாயக 'நியாயமான வழியில் வேறு மொழிகளையும் பயன்படுத்தலாம்' என்றதை ஏதோ பெரிய வரம்என்று தாமாக விலை மதிப்புக் கொடுத்து சிறி இலங்கா விடுதலைக் கட்சியார் தலைவரை இவ்வளவு தாராளசிந்தையாயிருந்து சிறுபான்மையினருக்குதவுவது ஆகாதென்று கண்டித்தார்களாம். பிரதமர் பழமுறை காரியத்தின் உள்ளாந்தரங்கத்தை உணர்த்தியும் அங்கத்தவர்கள் ஒப்புக்கொள்ளாததைக் கண்டுபாராளுமன்றத்தைக் குலைத்து விடுதலே வழி என்று திரு. பண்டாரநாயக கூறினதும் ஒருவாறு இந்த விபரீத வாதம் நின்றுவிட்டதாம்.

### புதுக் குடும்பத்திற் பழைய பிணக்கு

திரு. ஆர். ஜி. சேனநாயக ம. ஐ. முன்னணியிலே சேர்ந்திருக்கின்றார். ஆனல் ஓடும் புளியம்பழமும் போன்றுதான் உறவுகாட்டுகின்றார். இரண்டு தொகுதிகளுக்கு ஒரு பிரதிநிதியாயிருக்கும் இவர் சனநாயகக் கொள்கைக்கு மாருய் நடக்கின்றார் என்று சிறி இலங்கா விடுதலைக் கட்சி இளைஞர்கள் குடும்ப ஒற்றுமையைக் குலைக்கக் கூடிய வகையில் ஆட்சேபனை செய்திருக்கின்றார்கள்.

களனித் தொகுதிக்கு ஒரு ம. ஐ. முன்னணிப் பெண்மணியை அங்கத்தவராக்குவதற்குச் செய்யும் ஆலோசனையின் பயனுகவே இரட்டைப் பிரதிநிதித்துவம் பொருத்தமல்ல என்று இளைஞர்கள் கருதுகிறார்கள் போலும். அப்படித் திரு. ஆர். ஜி. களனியைக் கைவிட்டால் அவரை ஆதரித்த அத்தொகுதி ஆதிக்கக்காரர் அப் பெண்மணியை அங்கத்தவராக அனுப்பி ஒரு குடும்பக்கோட்டையை மக்கள் ஐக்கியமுன்னணிக்குள் அமைக்கக் கூடியதாயிருக்கும் என்று வதந்தி வளருகின்றது.

இளங்கோ விழா

# தாய் தடுத்தாலும் இனித் தமிழிலேதான்

## தமிழ்மறைக் கழகத் தலைவரின் வீரப் பேச்சு

"முழுதும் பழுதற்ற முத்தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றித் தமிழை வளம்படுத்தித் தமிழ்க் கலைகளை என்றும் நிலைபெற்றோங்கச் செய்த இளங்கோ அடிகளுடைய திருநாட் கொண்டாட்டத்திலே எமது அருமைத் தமிழ் மொழியினை இங்கு என்றும் வாழச் செய்வதற்குத் தமிழ் மக்கள் யாவரும் ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை இலங்கையின் எல்லாப் பக்கங்களிலுமுள்ள தமிழ் மக்களுக்கு விடுக்கின்றேன்" இவ்வாறு கொழும்புத் தமிழ்ச்சங்க ஆதரவில் சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்ற இளங்கோ அடிகள் விழாவுக்குத் தலைமைதாங்கிய தமிழ்மறைக்கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் அவர்கள் தமது தலைமையுரையிற் குறிப்பிட்டார். அவர் மேலும் தொடர்ந்து பின்வருமாறு பேசினர். "இலங்கையில் வாழும் தமிழ்மக்களுக்கு ஒருநெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது. சிங்கள மக்களுடைய ஒற்றுமை உணர்ச்சியும் மொழிப்பற்றும் தமிழ் மக்ளுக்குமிருப்பின், சூழ்ந்து வரும் இன்னல்களை நீக்கி வெற்றி காணலாம்.

"இன்று தொடக்கம் தமிழிலேயே எல்லாவற்றையும் செய்வோம் என்று ஒ...
வொரு தமிழனும் உறு...
செய்தல் வேண்டும். ...
மொழியை நாம் போற்று...
"தமிழ் அழிகிறது; தமி...
க்கு ஆபத்து" என்று இ...
குவதாற் பயனில்லை. உ...
ர்ச்சிமிக்க தமிழ் மக்க...
தாய் தடுத்தாலும் இனி...
தமிழிலேதான் எல்லாவ...
றையும் எழுதுவோம் பே...
வோம் என்று இன்...
முடிவு செய்தல் வேண்டு...
இம்முடிபை உடனே ...
கும் ஒரு பேரியக்கமா...
பரப்புதல் வேண்டும். ...
ழியக்கம் என்று ஒன்...
சில அன்பர்கள் தொட...
யிருக்கிறார்கள். தமிழ்ச்...
கங்களும் பிறவும் இத்த...
இயக்கத்தை ஆதரித்...
கூட்டங்களை நிகழ்த்தித்...
மானங்களை நிறைவேற்...
எல்லா மக்களையும் ...
முடிபை மேற்கொ...
டொழுகச் செய்லாம். ...
சினருக்கு நாம் எழு...
கடிதங்கள் யாவற்றை...
தமிழில் எழுதவேண்ட...
என்று யார் தடுத்தார்க...
தபால் விலாசங்கள், த...
கள், காசுக்கட்டளைகள்...
விய யாவற்றையும் தமி...
எழுத வாய்ப்பிருந்தும் இ...
ற்றை நம்மில் எத்தனை...
தமிழில் எழுதுகிறார்க...
இதனை வாசிக்கும் ...
வொரு தமிழனையும் ...
தமிழியக்கத்தை எங்...
பரப்புமாறு தமிழ்த்தாய்...
பேரில் வேண்டிக்கொ...
றேன்".

"இளங்கோவடிகளை ய...
இன்று போற்றுகிறே...
அவரைப் போற்றுவத...
இயல், இசை நாடகமா...
முத்தமிழையும் போற்...
ரோம். தமிழரின் ...
உணர்ச்சியை—ஆரிய ...
னரை அடக்கித் தமிழ...
தின் வீரத்தை நிலைநாட்...
பெருஞ் செயலை அ...
ரோம். அரசமாளி...
புக்கு முறைதவறிய ...
னனை வென்ற தமி...
பெண்ணரசியின் வீரத்...
வாழ்த்துகிறோம். கற்...
தெய்வமாய்த் தமிழ் நா...
லும் இந்த ஈழ நாட்டி...
பிறநாடுகளிலும் போற்...
படும் கண்ணகியினை வ...
குகிறோம். முத்தமிழ் ...
டின் பெருமைகளை ...
மூவேந்தரின் சிறப்பிய...
களையும் காண்கிறோ...

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

திருச்சிற்றம்பலம்.
...ழ்க அந்தணர் வானவர் ஆனினம்
...ழ்க தண்புனல் வேந்தனுமோங்க
[குக
...ழ்க தீயதெல்லாம் அரனாமமே
...ழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்.

இந்துசாதனம்

...ழ். துர்முகி௵ சித்திரை௴
உகூ உ வெள்ளிக்கிழமை

## ...ஆதிக்க ஆணவமா?

...அதிகாரபீடத்தில் அமர்ந்
...தும் ஆட்சி முறையின்
...றநெறியை மறந்து எண்
...ம் எழுந்தவாறு அரச
...பாகம் அநுபவிக்கத்
...ணிந்த ஐக்கிய தேசியக்
...ட்சித் தலைவர் இன்று
...ண்மூடி மௌனியாகிக்
...ருத்தழிந்து நிற்கின்றார்
...ன்பதையேனும் இப்
...பாழுது ஆதிக்கம் பெற்
...ருக்கும் மக்கள் ஐக்கிய
...ன்னணித்தலைவர் நினைக்
...ன்றாரில்லையே. ஆட்பலத்
...னல் அரசு நடத்துவது
...றமுறைக்குடம்பாடாகும்
...ன்று எண்ணியவர்கள்
...வரும் இக்கதியையே ஈற்
...ல் அடைந்தார்கள் என்
...தையும் நாம் பிரதமர்
...ண்டாரநாயகவுக்கு எடுத்
...க்காட்ட விரும்புகின்
...ரும்.

...மக்கள் ஆட்சியின் மகத்
...வம் எங்கே தங்கியிருக்
...ன்ற தென்பதை இப்
...பாழுது அரசு நடத்துகின்
...ர் அறிந்திலர்போலும்.
...லாரும் இன்புற்றிருப்
...ற்காகும் வழியிலே
...ட்சிபுரிவது சனநாயகமா
...ன்றி ஒருசாரார் உயர்ந்த
...லயில் அமர்ந்து நல்ல
...ண்ணம் வாழ்ந்து வர
...னயோர் தாழ்த்தப்பட்டு
...மைகளை அநுபவிக்க
...யாது ஒதுக்கப்படுவது
...நாயகமா? என்ற கேள்
...யைப் பிரதமரிடம் நேரடி
...கக் கேட்கின்றோம்.

...மக்கள் ஆட்சி மக்கள்
...ட்சியென்றும் நாளிலும்
...ழிகையிலும் நாச்சோ
...து நடுவு நிலைமையை
...ட்டும் நாயகன் யார்
...று வாய்ப் பறையறை
... பிரதமர் தமிழ்பேசும்
...கத்தவர்கள் பதின்மூ
... சிங்காசனப் பிரசங்கத்
...ல திருப்தியற்றவர்
...ாய்க் காணப்பட்டனர்
...பதின் அடிப்படை
...ன உண்மையை
...ாய்ந்து பார்க்காது
...திக்க ஆணவத்தால் அற
...றைக்கு முரணாகும் வழி
... அரசு நடத்துவதை
... கண்டிக்கின்றோம்.

...அரசியல் அமைப்புச்சட்
...களிலே பல வேறு
...ாசிரியர்களின் நுட்ப
...ன கருத்துவேற்றுமைக
... கைத் துணையாகக்
...ண்டு பேச்சலங்காரத்
... சிறுபான்மையின
... சமாதானப்படுத்தி

விடலாம் என்று எவரும் எண்ணிவிடுதல் கூடாது.

இந்த நாட்டிலே என்றுமில்லாத பரபரப்புத் தோன்றியிருப்பதையும் தமிழ் பேசும் மக்களின் இதயங்களைப் புண்படுத்தும் வண்ணம் பொறுப்பு வாய்ந்த அமைச்சர்கள் பொழுதுக்குப் பொழுது கல்வித்திட்டத்தைப்பற்றியோ மொழி ஆட்சியைப் பற்றியோ சித்தத்திற் றோன்றிய வாறு எண்ணம் சிந்தைத்தெளிவு இல்லாமற் பேசுகின்றமையையும் நோக்குமிடத்து அரசியல்நெருக்கடி மேலும் மேலும் வளர்ந்து அமைதியின்மைக்கு அடிகோலும் வழியிற் சென்றுவிடும் என்று நாம் கவலைப்படுகின்றோம். இலங்கை ஆட்சி என்று சொன்னால் அது ஈழம் வாழ் மக்கள் அனைவரின் நல்வாழ்வுக்குரிய பெற்றியுடைத்ததாக விருத்தல் வேண்டும். இதுவே சனநாயகக் கொள்கையின் அடிப்படை நோக்கம். பிரதமர் பண்டாரநாயக பொதுத் தேர்தலிலே பல கட்சிகளின் கைப்பிள்ளையாய்ப் பாராட்டுப்பட்டவர் என்றாலும் நீதிக்கும் நியாயத்துக்கும் மாறாக நடக்கமுடியாது என்பதை அன்னார் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.

---

# வாய் வேதாந்தமும் வாக்களிப்பும்

## பொதுவுடைமைத் தமிழ் அங்கத்தவரின் போக்கு

சிங்காசனப் பேச்சு நன்றியுரை விவாதத்தின்போது திருவாளர்கள் செல்வநாயகம் சுந்தரலிங்கம் பொன்னம்பலம் ஆகியோரின் திருத்தப்பிரேரணைகள் மீது கொடுபட்ட 'வாக்கு' விபரத்தின் விந்தையை அரசியல் வாதிகள் அறிவது நன்று.

சிறுபான்மையினருக்காக அல்லும் பகலும் அயராதுழைக்கின்றோம் என்று மேடைப் பேச்சுக்களிலே வாய் வேதாந்தம் போதித்துவந்த **சமசமாச பொதுவுடைமைத்** தோழர்கள் இந்த 'வாக்களிப்பில்' எவ்விதம் நடந்து கொண்டார்கள் என்பதை உலகம் அறிதல் வேண்டும்.

மூன்று திருத்தப் பிரேரணைகளையும் ஆதரித்தவர்கள் பதின்மூன்று தமிழ்ப்பேசும் அங்கத்தவர்களே.

அவர்கள்:

திருவாளர்கள் : அழகக்கோன், அமிர்தலிங்கம், செல்வநாயகம், எதிர்மன்னசிங்கம், கந்தையா (ஊர்காவற்றுறை), காரியப்பர், முஸ்தாபா, நவரத்தினம், பொன்னம்பலம், இராசதுரை, இராசவரோயதம், சுந்தரலிங்கம், வன்னியசிங்கம்.

**மூதூர் அங்கத்தவர் திரு. முகமதலி வாக்களிக்காது மௌனமாயிருந்து விட்டார்! இந்த மூன்று திருத்தப் பிரேரணைகளுக்கும எதிராக வாக்களித்த எழுபத்தைந்து அங்கத்தவர்களுள் (பருத்தித்துறை திரு. பொ. கந்தையா (பொதுவுடைமை)வும் ஒருவர். அவ்வாறே திரு. மாக்கான் மரைக்காயரும்.**

போதவுடைமைமை நவலங்கா சமசமாசம் ஆகிய இரு கட்சியினரும் ஒருவர் தப்பாது எதிராக வாக்களித்து **அரசாங்கத்தை ஆதரித்தனர்.**

---

மேற்சபையில் :

## இருமொழிகள் இங்குள்ளன என்பதை மறக்கமுடியாது!

பாராளுமன்றத்திலே மேற் சபை அங்கத்தவர் திரு. S. R. கனகநாயகம் திருத்தப் பிரேரணை கொண்டுவந்த பொழுது இலங்கையிலே இரண்டு மொழிகள் என்றும் இருந்தன—இருந்து வருகின்றன என்ற உண்மையை எவரும் மறக்கவோ மறைக்கவோ முடியாதென்றார். மொழிப் பிணக்கு ஒரு கட்சிப் பிணக்கல்ல. பேச்சு வன்மையாற் சமாளிக்கப் படக்கூடியதல்ல. பிற்சந்ததியார் எங்கள் மேற் பழி சுமத்தாதவாறு நாம் இந்த வேளையிலே நடந்துகொள்ளுதல் வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மேற்சபை அங்கத்தவர் திரு. சோ. நடேசன் பேசும் பொழுது இரு மொழிகள் என்றும் சம வரிசையில் நிலவி வந்த சரித்திரத்தை விபரமாக எடுத்துக் காட்டி, திரு. பண்டாரநாயக, திரு. ஜயவர்த்தனு போன்றவர்கள் அந்த முறையை என்றும் ஆதரித்தார்கள் என்பது உண்மை என்றும் எடுத்துக்காட்டிச் சனநாயக முறைக்குச் சற்றும் அமையாதது ஒரு மொழிக் கொள்கை என்று கூறினர்.

மேற்சபை அங்கத்தவர் திரு. A. M. அசீஸ் பேசும் பொழுது மொழிப் பிணக்கைச் சனநாயக அடிப்படையிலே தீர்ப்பதுதான் நல்ல வழியென்றும் சமஷ்டி அரசியலை முசிலிம் மக்கள் ஒருபொழுதும் விரும்பமாட்டார்கள் என்றும் கூறினர்.

---

## மாணுக்கர்களின் மத்தியான உணவு

கல்வி மந்திரியார் போட்டிருக்கும் புதிய வேலைத் திட்டத்தின்படி ஐந்தாம் தரம் வரைக்கும் மாணுக்கர்களுக்கு மத்தியான உணவு கொடுப்பதற்கு அடுத்த வருடத்துக்கு 150 இலட்சம் ரூபாய் வேண்டுமாம்!

## திரு. கா. சூரன் அவர்கள் காலமாயினர்

தேவரையாளிச் சைவ வித்தியாசாலையை ஸ்தாபித்து நடாத்துவதில் முக்கிய ஸ்தானம் வகித்தவரும், தமது ஊக்கத்தினுலும் சைவாபிமானத்தினுலும் ஷை பாடசாலையை வளர்த்துப் பொதுவாக வடமாகாணத்திலும், சிறப்பாக வடமராட்சியிலும் வாழும் ஹரிசன வகுப்பு மக்களின் சைவக் கல்விக்கு வித்திட்ட பரோபகாரியுமாகிய வதிரி கரவெட்டி திரு. கா. சூரன் அவர்கள் சில நாட்களாய்த் தம்மைப் பிடித்த நோய் காரணமாக 6-5 66 ஞாயிற்றுக்கிழமை பகல் தேகவியோகமாயினர்.

இவருக்குச் சிவபாக்கியம் என்னும் ஒரு மகளும் ஏகாம்பரம் என்னும் ஒரு மகனும் உளர். இவர்கள் முறையே அல்வாயூர் ஸ்ரீலங்கா வித்தியாசாலையிலும் தேவரையளிச் சைவ வித்தியாசாலையிலும் ஆசிரியராகக் கடமையாற்றுகின்றனர். இவரை இழந்து வருந்தும் மனைவி மக்கள் பந்துக்களுக்கு எமது அநுதாபம் உரித்தாகுக. இவரின் ஆன்மா சாந்தியடைவதாக.

---


# கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

## கும்பகருணன் வதைப்படலம்

(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையின் வெளியீடு

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், **க. வேந்தனுர் அவர்கள்** எழுதிய
விளக்கவுரையுடன் விரைவில் வெளிவரும்.

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

இத்துடன்,

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப்பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனுல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.

# சிறுபான்மையினர் மீது எதையும் திணிக்க முடியாது

—:o:—

## எதேச்சாதிகாரத்தை எதிர்ப்பது தெய்வீக உரிமை

—o—

**(பாராளுமன்றத்திலே சிங்காசனப் பேச்சு நன்றியுரை விவாதத்தின்போது இலங்கைத்தமிழ்க்காங்கிரஸ் தலைவர் திரு. ஜீ ஜீ. பொன்னம்பலம் அவர்கள் நிகழ்த்திய (ஆங்கில)சொற்பொழிவின் சாரம்.)**

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்குங்காணோம்" என்று தமிழ் மொழியின் சிறப்பினை வியந்துரைத்து; அதன்கலைச் செல்வங்களைப் பாராட்டி, ஆங்குள்ள இலக்கியத்தின் சிறப்பினை விளக்கும் முகமாக செந்தமிழ்ப் புலவர் தீட்டிய ஓவியமாம் திருக்குறளினை எடுத்துக் காட்டாகக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

16ம் நூற்றாண்டிலே போர்த்துக்கேயர் இலங்கை வந்து அடைந்தபோது, ஒரு தமிழ் அரசும் இங்கு ஆதிக்கம் செலுத்திக்கொண்டிருந்தது. ஆங்கு ஆட்சி பீடத்தில் இருந்தான் ஒரு தமிழ் அரசன். அறிவறை போகா, பொறை நெஞ்சத்துடன், இறை முறை பிழையாது செங்கோலோச்சினன். அன்று தமிழர்கள் ஒப்பற்ற நிலையில் இருந்தார்கள். கோட்டை இராசதானியிலும் புகழ் பெற்றிருந்தோர் தமிழரே.

ஈழப்பெருநாட்டில் மேனாட்டார் அச்சுயந்திரத்தைப் புகுத்தியதும், நூல்களைச் சிங்களத்தில்மட்டும் அவர்கள் அச்சிடவில்லை இரு மொழிகளும் வேண்டுமென எண்ணித் தமிழிலும் சிங்களத்திலும் ஆக்கினர். அழுதெனப் புகழ்பெற்ற இத்தமிழ் மொழியையே இன்றைய அரசாங்கம் நசுக்க முயல்கிறது அரசினர் ஆதரவு மொழி வளர்ச்சிக்கு அவசியமாகும். இன்று தமிழர் பண்பாட்டுக்கே அந்தியமணி அடிக்க இவர்கள் முயற்சிக்கின்றனர்.

முதலிலே தமிழரின் உரிமைகள் பறிபோயின. இதற்கு அடுத்ததாக அவர்கள் பண்பாட்டிற்கும் மொழிக் ஆபத்தினைவிளைவிக்கமுயல்கின்றனர்.

அந்நியர் ஆதிக்கத்தில் அவதியுற்ற காலத்திலே தமிழர்கள் ஆங்கிலம் பயின்றனர். ஆனல் அவர்கள் என்றும் தமிழர்களாகவே இருந்தனர். சிங்களவரும் ஆங்கிலேயராய் மாறிவிடவில்லை.

ஆனல் அது அன்று. இன்று தமிழர்களின் நிலை வேறு. அடக்குமுறையையும் ஆதிக்கத்தையும் அவர்கள் ஆட்சேபணையின்றி ஏற்கப்போவதில்லை. அவசியம் ஏற்பட்டால் போராடவும் தயாராகிவிட்டனர்.

சட்டசபைக்காலத்திலே, ஆங்கிலத்தினிடத்தில் தமிழ் மொழியையும் சிங்கள மொழியையும் வைக்க எண்ணினர். ஆனல் 10 வருடத்திற்குள் நிலைமை மாறிவிட்டது. ஆங்கிலேயர் வெளியேறியபோது இது எமக்குத் தெரிந்திருந்தால் அவர்களே போர்த்துக்கேயர், ஒல்லாந்தரின் வழித்தோன்றல்கள் என்றும் அதனல் அவர்கள் இங்கு வரும்போது சுதந்திரத்துடன் இருந்த தமிழரை அவர்கள் பழைய நிலையில் வைத்துவிட்டுச் செல்லும்படி கேட்டிருப்போம்".

முன்னர் திரு. டி. எஸ். சேனநாயகா சமர்ப்பித்த அறிக்கையொன்றை நினைவுபடுத்திக் கொள்வோம். அதில் அவர் இந்நாடு சிங்களவர், தமிழர் ஆகிய எல்லோருக்கும் சொந்தமானதென்றும் போதனமொழி எவரையும் பாதிக்கக்கூடாதென்றும் அழுத்தந் திருத்தமாக கூறியிருந்தார்.

ஏன்? இன்றுள்ள பிரதமரும் எதிர்க்கட்சியில் இருக்கும்போது இருமொழிகளும் அரசாங்க மொழியாக இருக்கும் என்றார். ஆனல் 1955 ஐப்பசியின் பின்பே இவர் தனது கருத்தை மாற்றிச் சிங்களம்மட்டுமே வேண்டும் எனக் கர்ஜிக்கத் தொடங்கினர்.

இன்று தேசிய உணர்ச்சி எங்களுக்கும் தாண்டவமாடுகிறது. நீங்கள் தாராளமாகச் சட்டங்களை வகுக்கலாம். ஆனல் அது உங்கள் எல்லைக்குள்மட்டுமே. எனினும் ஒன்று நான் நினைவூட்டுகிறேன். எமது உரிமைகளைப் பெற எல்லாவழிகளும் முடிந்துவிட்டால் ஆட்சியை எதிர்த்து ஆதிக்கத்தை ஒழிக்க புரட்சி எனும் தெய்வீக உரிமை எங்களுக்கு உண்டு. புரட்சியால் நாம் எமது உரிமைகளைப் பெறுவோம். இது திண்ணம். ஆதிக்கம் செலுத்த முயல்வது கோழைத்தனம். தோல்வியின் அறிகுறி இதுவேயாகும். ஒரு சிறுபான்மையினரின் உரிமைகளைப் பறித்து அதன் சிறப்பும் வளமும் மிக்க பண்பாட்டிற்குக் களங்கம் வரச் செய்வது ஆண்மையின் சின்னமா?

இதுவா வெற்றி வாகை? இவ்விழிந்த பண்பு மேன்மையுற்ற தமிழரிடம் இல்லை.

ஒரு நாட்டில் ஒரு சாதியினரும் ஒரு மொழியும் ஒரு பண்பாடும் இருந்தாலேயே பெரும்பான்மை ஆட்சி பயன் அளிக்கும். ஆனல் இங்குபோற் பலவித மொழிகள், பலவித கலாசாரங்கள் பல்வகை மதங்கள் இருக்கும் நாட்டிலே கணித முறையை அடிப்படையாகக்கொண்ட பெரும்பான்மை ஆட்சியால் செய்யக்கூடியது ஒன்றுமில்லை.

உண்மை சனநாயகத்திலும் சிறுபான்மையினரின்

தொடர்ச்சி 4ம் பக்கம்

# பெருவாழ்வு தரு[ம்] திருநீறு

—:0:—

## வினைபோக்கி மெய்யறிவு கொடுக்[கும்] சிவ சின்னம்

[முற்றொடர்]

"வேட நெறி நில்லார்
வேடம் பூண்டென் பயன்
வேட நெறி நிற்போர்
வேடமெய் வேடமே
வேட நெறி நில்லார்
தமை விறல் வேந்தன்
வேட நெறி செய்தால்
வீடது வாகுமே"

என்று திருமூலர் திருமந்திரம் கூறுகிறது.

விபூதி அணியும்போது எமது உள்ளமும் பரிசுத்த

ஆசிரியர், திரு. செ, சின்னத்துரை B. A. அவர்கள்

மாக வேண்டுமென்று நினைந்து பூச வேண்டும். விபூதியாகிய சிவ சின்னத்தை ஒரு வேடமாகக் கொண்டு மற்றவர்களை ஏமாற்றி வாழ்பவர்கள் அளப்பி[ல]
தீமை எய்துவர். இப்
விபூதியை நிறையஅணி
தீய வழியில் ஒழுகுகி
வர்கள் சிலர் இருப்பத
தான் நல்ல நெறியில்
குகிறவர்களுக்கும்
வேளைகளில் இழுக்
கூறச் சிலர் ஒருப்படுகி
கள். தவ வேடம் பூ
தீய வழியில் ஒழுகுகிற
பற்றை மறைவில் ம
திருந்து வேடுவன் பட்
ளைப் பிடிப்பதுபோலா

"தவ மறைந்து அல்ல
செய்
புதல்மறைந்து வேட்டு
புள் சிமிழ்ந்தற்

ஆகையால் விபூதியை
ளப் பரிசுத்தத்திற்காக
சிவ சின்னமாகவும் அ
வேண்டும். மேல் நாட
கொள்கைகள் பரவி

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

# மட்டக்களப்பு அங்கத்தவ[ர்] தமிழிலே நிகழ்த்திய பேச்சு

—0—

சபாநாயகர் அவர்களே! மேன்மை தங்கிய தேசாதிபதியின் சிம்மாசனப் பிரசங்கம், இந்த நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே என்றுமில்லாத பெருங் கவலையையும் கலக்கத்தையும் எதிர்காலம்பற்றிய ஏக்கத்தையும் ஏற்படுத்தியிருக்கின்றதுஎன்பதை முதற்கண் நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்துக்களும், கிறிஸ்தவர்களும் முஸ்லிம்களுமான தமிழ் பேசும் மக்கள் — பெரும்பாலாக ஒரு தாய், அதுவும் தமிழ்த்தாய் ஈன்ற சக உதிரச் செல்வங்கள் — வாழும் கிழக்கு மாகாணத்தின் தலைத்தொகுதியான மட்டக்களப்பின் பிரதிநிதி என்ற முறையில், நான் எனது தொகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்கள், தேசாதிபதி அவர்களின் சிம்மாசனப் பிரசங்கத்தைக் கேட்டு, படித்து எப்படி எதிரொலிக்கின்றார்கள் என்பதைப்பிரதிபலிக்க வேண்டியது எனது கடமையாகும்,

மதம் இனம் முதலிய துறைகளில் சிறுபான்மையினராக இருப்பவர்கள் விஷயத்தில் தமது அரசாங்கம். பாரபட்சமோ தாரதம்மியமோ, காட்டமாட்டாதென அலங்காரமாகப் பேசியிருக்கின்றார், நமது தேசாதிபதி "அலங்காரமான" என்ற அடைமொழியை நான் இங்கு அர்த்தத்தோடுதான் குறிப்பிடுகின்றேன். ஏனென்றால் சிறுபான்மையோர் நலவுரிமை பாதுகாப்புச் சம்பந்தமாக ஒருபுறம் உறுதிமொழி அளித்துவிட்டு, மறுபுறம் அவர்கள் ஆண்டாண்டு காலமாக, மகிந்தனுக்கும், மகாவம்சத்திற்கும் முன்னதாக உரிமையோடும் பெருமையோடும் வழங்கி வந்த தமிழ்மொழியை மறக்கச் செய்து தமிழ்பேசும் மக்களது மெலிந்த தொண்டையினுள்ளே சிங்கள மொழியைப் புகுத்தும் தரமாக மகாதேசாதிபதியவர்கள் தம்முடைய சிங்காசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த விஷத்தன்மை வாய்ந்த மொழி சட்டமாகவும் திட்டமாகவும் கூடிய விரைவில் வரப் போகிறதென்று தெரிகிறது. ஒரு இனத்தின் ஜீவாதார முக்கியத்துவம் வாய்ந்த அடிப்படை உரிமையில் முதன்மையான மொழி உரிமை அபகரிக்கப்பட்டபின் சிறுபான்மையோர் பாதுகாப்புப்பற்றி மகா தேசாதிபதி கூறியிருப்பது வெறும் அலங்காரமேயன்றி வேறு என்ன?

பரம்பரையாக தமிழ் பேசும் மக்கள் வாழக்கூடிய பிரதேசங்களில் சிங்களம் பேசும் மக்களை அரசாங்கம் குடியேற்றி, பொருளாதார, கலாச்சார, சமூக நெருக்கடிகளால் தமிழ் பேசும் இனத்தை நசுக்கிவிட முயலும் மு
ளைய அரசாங்கத்தின்
யேற்றத் திட்டத்தில்
வித மாற்றமும் தேசாதி
குறிப்பிடவில்லை.

எனது தொகுதி பெ
பாலும் ஏழை விவசா
ளைக் கொண்ட ஒரு ப
யாகும். ஊக்கமும் உ
புங்கொண்ட எண்ணிற
விவசாயிகள் என் தொ
யில் உள்ள எழுவான்க
படுவான்கரைப் பகுதி
சேர்ந்த கல்லடி,
போடை. நொச்சிமு
ஈச்சந்தீவு, கன்னன்கு
ஆகிய கிராமங்களில் வ
கின்றார்கள். அவர்களு
விவசாயத்தில் ஈடுபடுவ
குச் சொந்த நிலமில்
அவர்களுக்கு இருக்க
கூடிய துண்டு நிலங்க
தங்கள் விவசாயத்
வெற்றிகரமாக நடத
தற்கு பணமில்லாமல் க
டப்படுகிறார்கள். கட
வருடம் போகம் பொய்த்
தால் நூற்றுக் கணக்கா
விவசாயிகள் இன்றை
உண்ணுவதற்கு உண
லாமல் கஷ்டப்படுகிறார்க
இம்முறை செய்யப்ப
போகம், என் தொகுதி
வாழும் கன்னக்குடா, க
யாக்கன் தீவுப் பகுதிகள்
அறவே பயனளிக்கவில்
அவர்கள் முதலீடும் உழை
பும் அவம்போய்விட்ட
சமூகசேவா மந்திரியிட
ந்து அவர்களுக்கு அ
சாங்க உதவி மான்ய
கிடைத்தாலொழிய அ
கள் வாழ முடியாது.

தொடர்ச்சி 4ம் பக்கம்

# சிறுபான்மையினர் மீது ...தையும் திணிக்க முடியாது

3-ம் பக்கத் தொடர்ச்சி

க்துழைப்புடன் ஆளுவது பரும்பான்மை ஆட்சி ன்பது. ஒத்துழைக்க றுத்துப் புரட்சியில் கண் வக்கும் சிறுபான்மையி ரைப் புறக்கணித்து வர்மீது ஆதிக்கம் செலு க அதனல் முடியாது. தனலேயே. சிங்களத்தை மீது புகுத்துவதை நாம் ன்மையாகக் கண்டிக்கி றும். சிங்களம் அரசாங்க ாழியானல் தமிழரின் தந்திரம்பறிபோகும் என் று நாம் கூற வேண்டிய ல்லே.

எம்மை ஆள்வோரின் ாழி சிங்களமாயிருக்க ம். ஆனல் இதை நாம் க்கப்போவதில்லே. உண் மத் தமிழினத்தந்தைக்கு ந்தனுக்கும் எந்தத் தமிழ ம் சிங்களத்துக்கு அடி ணிந்து கைகட்டி வாழப் ாவதில்லே. இருமொழி ச் சகிப்போம். மூன்று ாழிகளேயும் சகிப்போம். னல் வாழ்க்கை நடத்து ற்காகக்கைகட்டி நின்று மொழி ஆதிக்கத்திற் த் தலேகுனியப் போவதி ல. எமது நாட்டிலுள்ள வள்ளித்தோட்டங்களில் ழைத்து எமது வயிற்றை ர்ப்போம். வீறு கொ டெழுந்து வீரச் செய ற்றுவோமே யொழிய னர்களாகி விளலுக்கு ப்பாய்ச்ச மாட்டோம். வாழ்க்கைத்தரம் குறைய லாம். ஆனல் அடிமை வாழ்விற்காக அடிவருட மாட்டோம்.

காங்கேசன்துறைப் பிரதிநிதி அதிக மக்கள் சமஷ்டிக்கு வாக்களித்ததாகக் கூறினர். இவர்கள் எதையும் கூறலாம். இதில் வில்லங்கமில்லே. ஆனல் சமஷ்டியின் அடிப்படை என்ன என்பது இன்னமும் விளங்கவில்லே. ஒரு சபை ஆட்சியா? அல்லது இருசபை ஆட்சியா என்பது இன்னமும் வெளியாகவில்லே. ஒரு சபை என்ருல் அங்கத்துவம் எத்தகையது? இருசபை என்ருல் அதன் நோக்கம்தான் என்ன? மத்திய இராச்சிய அரசாங்கங்களின் வேலேகள் எவை என்பதுபற்றி இவர்கள் எதையும் கூறவில்லே. எல்லாம் மர்மமாகவே இருக்கின்றன.

இன்றுதமிழர்கள் பெரும் அபாயத்தில் இருக்கின்றனர். எமது மொழிக்கே இறுதியைத் தேடுகின்றனர் இந் நிலேயில் எம்முன் வீற்றிருக்கும் தேசிய வாதிகள் தமிழுக்கு மரியாதை செய்வார்களா என்பதைச் சமஷ்டி வாதிகள் யோசிக்க வேண்டும். சமஷ்டி அரசியலால் நாம் இந் நெருக்கடியைத் தீர்த்து உய்யும் வழியைக் காண முடியாது.

——

# பெருவாழ்வு தரும் திருநீறு

3-ம் பக்கத் தொடர்ச்சி

கும் இக் காலத்தில் விபூதியை அணியச் சிலர் கூசுகின்றனர். படித்த இளேஞர்கள் விபூதி பூச வெட்கமடைகின்றனர்.

மனம் சுத்தமாயிருந்தால் போதும் என்ற வீண் குதர்க்க நியாயம் பேசுகிருர்கள் சிலர். சைவக் கல்லூரிகளில் விபூதியை நித்தியமும் அணியும் மாணவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவு. பிற மதப் பள்ளிக்கூடங்களிற் கல்வி பயிலும் சைவ மாணவர்களின் நிலே பேசத்தேவையில்லே. தமிழ் உடல் போன்றது. சைவம் உயிர். சைவத்திற்கும் தமிழிற்கும் எழுச்சியிருக்குங் காலத்தில் விபூதியைப் பற்றிய எழுச்சியில்லே. படித்தவர்களிற் சிலர் கொள்கை அளவில் புத்தர்களாயிருக்கிருர்கள். மனம் சுத்தமாயிருந்தாற்போதும். புறசாதனம் தேவையில்லே என்று திருப்தி கூறும் படித்த வாலிபர் அனேகர். ஆனற் பொதுசனங்களிடம் விபரீதக் கொள்கையில்லே. சைவ உணர்ச்சியும் தமிழ் உணர்ச்சியும் பரவியிருக்கும் இக் காலத்தில் விழிப்புணர்ச்சி மிகுந்திருக்கும் இக் காலத்தில், சைவ சாதனங்களேப் பற்றிய உண்மை உணர்ச்சி இல்லாமலிருப்பது பரதவிக்கத்தக்க விஷயமாகும். ஆசிரியர்கள். பெற்ருேர்கள், உயர்ந்த பதவிகளிலுள்ள சைவர் யாவரும் விபூதியை முறைப்படி அணிந்து அதன் உண்மையை உணர்ந்து உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியுடையவர்களாக வாழ்ந்து காட்டினல் நாடு பல வழிகளிலும் செழிப்புற்று ஓங்கும்.

“பேசிற்ரு மீசனே
யெந்தா
யெந்தைபெருமானே
யென்றென்றே
பேசிப் பேசி பூசிற்ருன்
திருநீறே நிறையப்பூசி”

என்று மணிவாசகர் கூறும் திருவாக்கை உற்று நோக்குக.

வாழ்க திருநீறு! ஆழ்க தீயதெல்லாம்! அரன் நாமமே சூழ்க வையகமெல்லாம்!

## கோட்டு விற்பனவு விளம்பரம்

———

இல MB / 264
மத்தேசு பொன்னேயா
கொக்குவில்
வழக்காளி.
எதிர்
1 கதிரவேலு மாரிமுத்து
கொக்குவில் மேற்கு
தற்போது புளியன்குளம்
எதிராளி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் MB / 264 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளேப்படி பின்னல் விபரிக்கப்படும் இரண்டு துண்டுக் காணிகள் 1956 ஆண்டு ஆனி மீ 16 உ சனிக்கிழமை பிற் பகல் 4 மணி தொடக்கம் அந்த அந்தக் காணிக்குள் நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்

காணி விபரம்

1. யாழ்ப்பாணம் வண்ணர் பண்ணே மேற்கில் ஆண்டிப் புலமும் நீர்நொச்சித்தாள்வு என்னும் காணி நீ. இ 2 குழி $12\frac{1}{2}$ இனறும் வான் பயிர் செய்பயிர்களும் விடும்.

எல்லே கிழக்கு நாகலிங்கம் பெண் சின்னப்பாவின் ஆதனம். வடசகு அப்புக்குட்டி பெண் பவளரத்தினத்தின் ஆதனம். மேற்குஇரண்டாம்காணி. தெற்கு வீரகத்தி பெண் ஆச்சிப்பிள்ளேயின் ஆதனம்.

கிணற்றில் மேற்கெல்லேக் காணிக்காறருக்குடையதண்ணீர்ப் பங்கும் வழிவாய்க்கால் உருத்து பிறநீங்கலாக.

(2) யாழ்ப்பாணம் கொக்குவில் ஆண்டி புலமும் நீர்நொச்சிதாள்வும் என்னும் காணி நீ. இ. 11 குழி.

எல்லே கிழக்கு வீரகத்தி ஆசைப்பிள்ளேயின் ஆதனமும் முதலாம் காணியும்.

வடக்கு அப்புக்குட்டி பெண் பவளரத்தினத்தின் ஆதனம்.

மேற்கு கதிரவேலு நாகமுத்துவின் ஆதனம்.

தெற்கு ஒழுங்கை.

இதில் சொரியலாக அரைவாசி.

வ. அ. துரையப்பா,
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்
4-5-56.
ம. 278. 11-5 (ரூ. 100)

# மட்டக்களப்பு அங்கத்தவர் தமிழிலே நிகழ்த்திய பேச்சு

3-ம் பக்கத் தொடர்ச்சி

க்கமுடியாது. அடுத்த டம் நிலத்தை உழ எண் வும் முடியாது. அவர் தொழிலற்றவர்களாக லேயற்றவர்களாக திண் டவேண்டியிருக்கிறது கிழக்கு மாகாணத்திலே பிறந்து வளர்ந்த ஏழை சாயிகள் இப்படி இயற் யோடு போராடி இன் லுற்று உயிர் வாழும் து அந்த மாகாணத்தி யே உருப்பெற்று வரும் ல்லே, கந்தளாய், கல் ா, உன்னிச்சை போன் குடியேற்றத் திட்டங்க ல் அவர்களுக்கு இடமும் மும் அளிக்கப்படுவ லே. அங்கெல்லாம் ளியிடங்களிலிருந்து சிங் க் குடியேற்றம் அரசாங் தின் அநுசரணேயுடன் ண்டு வந்து நாளிலும் ழுதிலும் நாட்டப்படு து. இந்தக் குடியேற் திட்டங்களில் இடம் றவும், ஊக்கத் தோடு சாயத்தில் ஈடுபட்டு நாட் ன் பொருளாதாரத்தை பயன்படுத்தவும் ஆற் வாய்ந்த அருங்காளேயர் பலர் என் தொகுதியில் த்துக் கொண் டிருக்கி ர். ஆனல் அவர்களுக்கு ங்கே இடங்கிடைக்கிறது? ம் சமூகசேவா மந்திரி அவர்கள் இதைப்பரிசீலனே செய்து போதிய நிவாரணம் அளிக்கவேண்டு மென்று இந்தச் சந்தர்ப்பத்தில்நான் கேட்டுக் கொள்ளுகிறேன். கிழக்கு மாகாணத்தில் பிறந்த ஏழை விவசாயிகள் தற்போது பணம் இல்லாமற் கஷ்டப்படுகிருர்கள்.

எனது தொகும் பெரும் பாலும் கடல் ஏரிகளால் பிரிக்கப்பட் டிருக்கின்றது. சுத்தநீர் இல்லாமல் ஆயிரக் கணக்கான மக்கள் கஷ்டப்படுகிருர்கள். கனம் சுகாதார மந்திரி அவர்கள் இதற்கு வேண்டிய நடவடிக்கைகளே எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

பெரியகளம், கரையாக் கந்தீவு, கொத்தியாலே, வவுணதீவு ஆகிய இடங்களில் வாழும் ஆயிரக்கணக்கான மக்கள் இன்றைக்கு சுத்தநீர் இல்லாமற் கஷ்டப்படுகிருர்கள். இந் நிலேயைத் தீர்ப்பதற்கு ஏதும் நடவடிக்கை எடுப்பதாக மகாதேசாதிபதியின் சிங்காசனப் பிரசங்கத்தில் காணப்படவில்லே என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

மகாதேசாதிபதியின் சிங்காசனப் பிரசங்கத்தில் சிறுபான்மையினரின் நல உரிமைகளேக் காப்பாற்றப்படும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது ஆனல் இந்த தமிழ் பேசும் மக்களது பொருளாதாரம் மொழிஉரிமை காப்பாற்றப் படவில்லே என்பதை மிகவும் மன வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

சபாநாயகர் அவர்களே! எனது தொகுதி ஏராளமான கடல் தொழிலாளர்களேக் கொண்ட பகுதியாகும். அப்பகுதிகளில் சிங்கள மீன்பிடிகாரர்கள் ஆயிரக்கணக்கில் வந்து கடற்ருெழில் நடத்துகிருர்கள். இதனலேதமிழ் பேசும் மக்கள்கடற்ருெழிலால்பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகிருர்கள்.

## நேயர்கள் நெஞ்சம்

ஆசிரிய அர்ப!

# (பஸ்) விசை வண்டி நிலேயத்திலே துர் நாற்றம்!

அதிகாரிகள் ஆவன செய்வார்களா......?

யாழ்நகர விசைவண்டி (பஸ்)நிலேயத்திலே தினமும் வந்து போகும் பொது மக்களுக்குப் பலவிதமான கஷ்டங்களும், வசதியீனங் களும் நீக்கப்படா திருக்கின்றன. அவ்வித கஷ்டங் களுட் பொதுமக்கள் பலரது உள்ளத்தையும் புண் படுத்தக்கூடியதாக உள்ளது இரண்டு. அவற்றுள் ஒன்று, நிலேயத்துக்கு அணித்தாகவுள்ள மற்சச் சந்தை, மற்றது சமீபத்திலே அமைந்திருக்கும் மாமிசக்கடைகளாம். இந்த இரண்டு விரும்பத்தகாத விற்பனே இடங்களினல், நிலேயத்திலே மணிக்கணக்காக நடமாடும் பொது மக்களுக்கும் விசைவண்டியிலே பிரயாணம் செய்யும் பிரயாணிகளுக்கும் சொல்லொணுக் கஷ்டம் ஏற்பட்டிருக்கின்றது. துர்நாற்றத்தின் சூழலுக்குள்ளே அகப்பட்டு அந்தரப்படவேண்டியிருக்கின்றது.

பொது மக்கள் விசை வண்டி நிலேயத்திலே பிரயாணத்துக்குக்“கால்மணி” “அரை மணி” நேரம் காத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டால் மற்ச மாமிசச் சந்தையிலிருந்து வரும் கெட்ட நாற்றமும் அருவருப்பும் பெருந்தொல்லேயைக் கொடுக்கும் என்பதை விளக்கிக் காட்ட வேண்டியதில்லே.

சுகாதாரமின்றேற் சுபீட்சமேது? சுகம் ஏது? “கெட்ட நாற்றம் கிட்டவும் ஆகாது” என்பதன்ருே பொன் மொழி. விசை வண்டி நிலேயத்திற் பிரயாணத்தின் பொருட்டும், வேறுபலசெளகரியங்களுக் காகவும்; வந்து போகும் பொது மக்கள் எத்தனே நாளேக்கு இந்தக் கஷ்டத்தை அநுபவிப்பது? மக்கள் உலாவும் பிரதான வீதிகளுக் கருகாமையிலே, **மாமிசக் கடைகளும், மற்சச் சந்தைகளும், சாராயக் கடைகளும்** இருப்பது, மக்கள்உள்ளங்களிலேஒருவித வெறுப்புணர்ச்சியை எழச் செய்வதாக இருக்கின்றது. ஆகலின், மேற் காட்டியது போன்ற பிரதான இடங்களிலே — மக்கள் கூடும் மதிப்புக்குரிய தானங்களுக்கு அணித்தாகவும் மற்சச் சந்தை, மாமிசக் கடை, மதுக்கடை என்பன போன்ற விற்பனே நிலேயங்களே இல்லா தொழிக்க வேண்டும். அதற்கு என ஓர் தகுந்த வேறு இடத்தைத் தெரிந்து எடுக்க வேண்டும். இன்றேல் விசை வண்டி (பஸ்) நிலேயத்தைத் துர் நாற்றமில்லாத ஓர் புனிதமான இடத்திலே மிளிரச் செய்ய ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும். இவ்விஷயத்தில் சுகாதார அதிகாரிகளும், நகர சபை அங்கத்தவர்களும், மாநகர சபைத் தலேவர்அவர்களும், விசை வண்டிச் சேவையாளர்களும், பொது நல அபிமானிகளும் உடனடியாக உழைத்து இந்தக் குறையினே நீக்க வேண்டுவன வற்றைச் செய்துதவவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம்,
கா. இரகுநாதன்
அம்பாள்வீதி, நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம், 1-5-56.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோடு
கட்டுடை, மானிப்பாய்
சபாபதி எட்வின் பொன்னப்பா
—வழக்காளி

இல. 10458

விரோதமாக

மானிப்பாய்
1. ஆறுமுகம் குமாரசாமியும்
2. பெண் நாகம்மாவும்
3. சபாபதிப்பிள்ளை ஆனந்தநடராசாவும்
4. பெண் புஷ்பமணியும்.

எதிரிகள்

மேற்குறித்த இலக்க வழக்கில் குறித்த கோட்டார் எனககனுப்பிய கமிஷன் கட்டளைப் பிரகாரம் இதன் கீழ்க் காணப்படுங் காணிகள் 1956ம் ஆ ஜுலை மீ 7ம் உ (ஆனி 24) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் முறையே குறித்த காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத் தொகை

முதலும் வட்டியும் ரூபா. 2336, 66-ம் இதில் ரூபா 200ப 00 க்கு 27-10-53 தொடக்கம் 20-1-54 வரையும் ஹு 1 க்கு 100/— க்கு 12 வீதமான வட்டியும் அதன் பின் மொத்தத் தொகைக்கு இறுக்கப்படும் திகதிவரையும் ஹு 1 க்கு 100/— க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவும் அதாவது கமிஷன் விடு முன் பொறுதத செலவு ரூபா 144 15ம் கமிஷன் அனுப்பச் செலவு ரூபா 40-55ம் இனிமேல் பொறுக்கும் செலவு ரூபா33ம் கோட்டுச் செலவில் ரூபா 150 ம். ரூபா: 6-ம், ரூபா6 ம் இறுபட்டிருக்குது.

பெ. முத்துத்தம்பி
வெந்திஸ் கமிஷனர்.

சுதுமலை தெற்கு
மானிப்பாய்,
1956ம் ஆ மே மீ 7ம் உ

ஆதனவிபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு மானிப்பாய்க் கோயிற்பற்று மானிப்பாயிறை எழுமுள்ளி தியாகர் தோட்டம் அலலது தியா தோடை கில, பர, 4ம் குழி 11-ம் கல்வீடும் பயிர்வகைகளும் கிழக்கெல்லைக் காணியின் கிழக்கெல்லையி லிருக்கும் கிணற்றில் பங்கும் தூர்வை வழிவாய்க்காற் பங்கும். எல்லை கிழக்கு தம்பிப்பிள்ளை தம்பித்துரைக்கும் பெண் சிவக்கொழுந்துவுக்கும் உரிய ஆதனம் வடக்கு அமபலம் கனக சபையின் ஆதனம் மேற்கும் தெற்கும் ஒழுங்கை, இதடங்கலும் இதைச் சேர்ந்தவைகளும், இக் காணி E 280/191-ல் பதிவு செய்யப்பெற்றது.

2. ஷெ மானிப்பாய்க்கோயிற்பற்று மானிப்பாயிறை எழுமுள்ளியும் , தியாகர் தோட்டமும், கில, பர. 9 ம் குழி 12 ம் பயிர வகைகளும் எல்லை கிழக்கு சின்னத்தம்பி சபாபதியின உரிமைக்காரருக்கும். தியாகராசா கைம்பெண் ஆச்சிக்குட்டிக்கும் உரிய ஆதனம். வடகது அம்பலம் கனக சபைக்குரிய ஆதனமும். தூர்வை கிலமும் இக்காணிகரு வரும் ஒழுங்கையும். மேற்கு தமபிப்பிள்ளை தம்பிதுரைக்கும் பெண் சிவக்கொழுந்துவுக்கும் உரிய ஆதனமும் தூர்வை கிலமும் கிணற்றுப் பாவிப்புக்குப் போக விடப்பட்ட ஒழுங்கையும். இக் காணிக்கு வரும் ஒழுங்கை முகப்பும், கந்தையா பெண மீனும்பாளுக்குரிய ஆதனமும், தெற்கு தூர்வை கிலமும், செல்லப்பா வயிரமுத்துவின் ஆதனமும், இதடங்கலும் மேற்கெல்லையாகவிருக்கும் தூர்வை கிலத்திலும் அகிலிருக்கும் கிணற்றிலும் இக் காணிக்கும் கிணற்றுக்கும் இக் காணியின் மேற்குப் பக்கமாக றோட்டிலிருந்துவரும் ஒழுங்கையிலும் பாதையிலும் கிணற்றுக்கு வரும் பாதையிலிருந்தும் பலா ஒன்றிலும் இக்காணிக்கு வரும் ஒழுங்கையில் கிற்கும் ஒரு தென்னை மரத்திலும் இக காணிக்குரிய பங்குகளின் உரித்துக்களும். இக்காணி E 267/12-ல் பதிவு செய்யப்பெற்றது.

பெ. முத்துத்தம்பி
வெந்திஸ் கமிஷனர்.
7-5-56.

M 277 11-5- (து 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

கோண்டாவில்
ஆறுப்பிள்ளை சின்னத்துரை
வழக்காளி

இல. M B 76

எதிராக

கோண்டாவில்
1 பொன்னையா வேலுப்பிள்ளையும்
2 பெண் இராசம்மா

எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 76 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956 ஹு ஆடி மீ 13 உ வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக்நல்லூர்க்கோயிற்பற்று கோண்டாவில்இறை அரியன்காடும் மட்டையவோடையும் கி. ப. 3ம் வீடும். எல்லை கிழக்கு ஒழுங்கையும், நாகலிங்கம் செல்வரெத்தினமும் அவருடைய சகோதரரின் ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு மயில்வாகனம் பெண் தணலெட்சுமி அம்மாவின் ஆதனம். தெற்கு நாகலிங்கம் செல்வரெத்தினமும் அவருடைய சகோதரரின் ஆதனம். மேற்குப் பக்கத்தில் இருககும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும் வழிவாய்க்கால் உருத்தும். இதடங்கலும்.

சே. இரத்தினசபாபதி,
கொமிஷனா.

51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
8-5-56.

M. 280 11 5 56. து 200

## கோட்டு விற்பனவு விளம்பரம்

—0—

இல. M B, 477

R. R, நல்லையா கைம்பெண் சொர்ணம்.

70/2 வாட்பிளேசு;
கொழும்பு
வழக்காளி

எதிர்

சிவசுப்பிரமணியம் சிவருமலிங்கம்
வண கிழக்கு தற்போது,உணவு ஆபிசு,
எடின்பேக் கிறிசென்று
கொழும்பு
எதிராளி.

யாழ்ப்பாணம் பெரிய கோட்டின் M B 477ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் ஈட்டுஉறுதி 1956ஹு ஆனி மீ 23 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்த ஈட்டுக் காணிக்குள் கின்று பிரசிதத ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

1917ம் ஆண்டு பங்குனி மாசம் 18ம் திகதி யாழ்ப்பாணம் பிரசித்த நொததாரிசு R சிவகுநாதரால் (ஜோனிசு) 1149 ம் இலக்கத்தில் கரையூர் ஜோனிசு மரியாம்பிள்ளையும பெண் எலிசம்மாவும் எதிரி பேரில் எழுதிக்கொடுத்த ஈட்டு உறுதி. முதல் ரூபாய் 15000, = வட்டி நூற்றுக்கு ஐந்து வீதம்.

ஈட்டில் அமைந்த காணி யாழ்ப்பாணம் சுண்டிக்குளி இறை கீல குட்டித்தரையும் அரியதுரையன் தரையும் என்னும் காணி கீ. இ. 4 குழி $8\frac{3}{4}$ கிணறும் மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லைகிழக்கு குருசு முத்துபெண் திவ்வியமும் சந்தியாகு கைம்பெண் மேரியும். மனவல் குசையும் மறுவும்

வடககு காலம்சென்ற M. T, யோசேப்புவின் உரித்தாளரும் பங்காளரும். மேற்கு முருகர் எட்வேட்டும் பங்காளரும்.

தெற்கு கிட்டங்கி தெரு யாழ்ப்பாணம், நகர சபையா ரால் மதிக்கப்பட்ட காணி கம்பர் 131.

வ. அ. துரையப்பா
கொமிஷனர்.

யாழ்ப்பாணம்,
7-5-56.

M 271 11.5 (து 100)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

1 கொக்குவில் சுப்பையா மயில்வாகனமும்
2 ஷெ பெண் ஞானரஞ்சிதமும்
வழக்காளிகள்.

இல. 11906

எதிராக

சுதுமலை
ஆறுமுகம் பொன்னம்பலம்
எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் 11906-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி. பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹு ஆனிமீ 1 உ வியாழக்கிழமை பிற்பகல் 4-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளிக் கோயிற்பற்று சிவியாதெரு இறை 'புளியடியிற்புலம்' கி. பரப்பு 8 ஆலை ஆட்சிப்படியும் அளவுப்படியும் 8 3/4 பரப்பும் வீடும், கிணறும் பனைகளும் தென்னைமரமும் மற்றும் வான்பயிர் செய்பயிர்களும் இதில் கிந்தமாக வடக்குப் பக்கமாக $4\frac{1}{4}$ பரப்பும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கு றோட்டு, வடக்கு டாக்குத்தர் St யோண் புவிராசசிங்கத்தினுடைய ஆதனம், மேற்கும் தெற்கும் நாகமுத்து இராசரெத்தினத்துக்குடையவாதனம், இக் காணி D 215/177 ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

இருதுண்டுக்காணிகள் 1956ம் ஹு ஆனிமீ 16உ சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் கின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணிகள் விபரம்

1 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் பூனகரிப்பகுதி மட்டுவில் நாடு "கணவாய்ப்பள்ளம்" 32 ஏக்கர் இதில் கிந்தமாக கிழக்குப்பக்கமாக 24ஏக்கர் அத்துடன் வங்களாவும், வீடும் கொட்டிலும் தரவும் பயிர்வகைகளும். எல்லை கிழக்கு மு. சிவபாதசுந்தரம் பெண் செல்வரத்தினத்துக்குடைய ஆதனம், வடக்கு முடிக்குரியவாதனம், மேற்கு வல்லிபுரம் சுப்பையாவுக்கு விலைப்பட்ட இக் காணியில் ஒரு பகுதி தெற்கு ஆறுமுகம் தம்பையாவினுதனமும் மறுபேருக்குமுடைய வாதனமும், இக்காணி G 28,240-ம் இலக்கப் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கிறது.

2 ஷெ மட்டுவில்நாடு இறை "I" என்னும் அட்சரமிட்ட P P A 1413 என்ற துண்டுக் காணி ஏக்கர் 1, றூட் 1 பேட்சு 6 02-ம் இதற்கெல்லை கிழக்கு முடிக்குரிய ஆதனம், வடக்கு பூனகரி சங்குப்பிட்டி றோட்டு, மேற்கு முடிக்குரிய காணி, தெற்கு மேற்சொல்லிய 2 - ம் காணி. இக் காணி G 28/241-ம் புத்தகத்திலே பதியப்பட்டிருக்கின்றது.

இக் காணிகளைப்பற்றி ஏதாகுதல் விபரம் அறிகிறதாயிருந்தால் பிறக்டர், க செ. சோமசேகரம் அவர்களிடம் அறிந்து கொள்ளலாம்.

செ. இரத்தினசபாபதி,
கொம்மிஷனர்.
8-5-56.

(M 28 1 11-5-56. து 200)

### ஒரு தொகுதியை விடுவாராம்

திரு. ஆர். ஜி. சேனநாயக இரண்டு தொகுதிகளுக்கும் அங்கத்தவராக இருப்பது சரியல்லவென்றும் அவர் களனித் தொகுதியைக் கைவிடக் கூடுமென்றும் பிரதமர் பதிரிகை கிருபர் கூட்டத்திற் கூறினர்.

### திருநாவுக்கரசு நாயனுர் குருபூசை

தெல்லிப்பழை பாலர் ஞானேதய சபையாரால் திருநாவுக்கரசு நாயனுரின் குருபூசை சித்திரை மாதம் 23 ந் திகதி (5-5-56) சனிக்கிழமை மாலை காசி விநாயகர் ஆலய மண்டபத்தில் சபைத் தலைவரின் தலைமையில் கொண்டாடப்பட்டது.

பிற்பகல் 4 மணியளவில் ஸ்ரீ காசிவிநாயகப் பெருமானுக்கும் திருநாவுக்கரசு சுவாமிகளின் திருவுருவப் படத்திற்கும் விசேட பூசைகள் நடைபெற்றன. 5 மணியளவில் கூட்டம் நடைபெற்றது. சபைத் தலைவர் நாயனுரின் அற்புதங்களை எடுத்து விளக்கினர். செல்வன் பூ சிவானந்தராசா "நாயனுரின் தொண்டு என்னும் பொருள்பற்றிப் பேசினர்.

இக்கூட்டத்தில் செல்வி சி. சின்னம்மா, செல்வர்கள் சு. திருநாவுக்கரசு, வி. குகநாதன், ந. ஜெகதீஸ்வர ஐயர், சி. மகாலிங்கம் ஆகியோர் தேவாரம் ஓதுதலிற் பற்குபற்றினர்.

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடம்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 13—5—56 —— 19—5—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

வேலைப் பாரம் கூடும். ஆனல் நற்பலன் கிச்சயம் மனவமைதியிராது. சுற்றத்தவர்கள் சிறு தொந்தரவு கொடுப்பார்கள்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

தேககிலையிலே தளப்பமிருக்கும் தகப்பன் வழிச் சுற்றத்தவர்கள் மூலம் தொந்தரவு ஏற்படலாம். எழுத்தில் எந்தப் பொறுப்பையும் எடுத்தல்கூடாது. குடும்ப வட்டாரத்தில் விபரீத விளக்கத்துக்கு இடமுண்டு.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

போட்டியிடுபவரை வெல்லுவதற்கு இடமுண்டு. சுற்றத்தவர்களின்கண்டனத்துக்காளாக வேண்டி வரும். ஆனல் அதைப் பொருட்படுத்தாது எடுத்த காரியத்தைத் தொடரவும். வார இறுதியில் நண்பர்கள் நல்லுதவியாயிருப்பார்கள்,

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

மேல் கிலையிலுள்ளவர்களதும் நண்பர்களதும் சகாயத்துக்கிடமுண்டு. பழைய முதலால் நல்ல பேறு கிடைக்கும். இருந்தும் மனச்சாந்தி இராது. பிள்ளைகளுக்குச் சுகவீனம் காணப்படும.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.

அநேக எதிர்ப்பைத் தாண்ட வேண்டிவரும். முரட்டுத் தன்மை ஒரு வழியிற் காரியானுகூலத்துக்குதவியாயிருக்கும். வாகனங்களால் அதிகசெலவு ஏற்படலாம்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

ஆண்களுக்குப் பெண் நண்பர்களாலும் பெண்களுக்கு ஆண் சிநேகிதர்களாலும் தொந்தரவுகள் ஏற்பட இடமுண்டு. குடும்பச் சூழலிலே விளங்கா விளக்கத்துககிடமுண்டு. உத்தியோக முறையில் நல்ல காலம் ஆனல் உடனடியாக இலாபத்துக்கிடமிராது.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

தேககிலை துன்றுவதற்கிடமுண்டு தொற்று நோய்களைப் பற்றி எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். தொல்லைகளை நீக்க நண்பர்கள் உதவியாயிருப்பர். வார இறுதியிற் பண இலாபத்தைக் காத்திருக்கலாம்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

வாரமுதலிருநாட்களும் பெருந்தொல்லைகளுக்குட் சிக்கவைக்கும் பின்னர் கிலைமை சீரடையலாம். புது முயற்சிகள் நற்பயனளிக்க இடமுண்டு. ஆனல் அந்தவகையிலே அதிகமாகப்பாடுபடவேண்டும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்,

வியாபார அலுவல்களுக்கு ஞாயிறும் திங்களும் உகந்தவை. ஆனல் செவ்வாய் புதன் வியாழன் காலை கவனமாயிருத்தல் வேண்டும். பின்னர் நன்மைக்குரிய காலமாகும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

சொந்த அலுவல்களுக்கு முன் வார முற்பகுதி உகந்ததாயிருக்கும். போட்டியிடுபவர்களை ஜெயிக்க இடமுண்டு. வியாழன் வெள்ளி சனி காலை கவனமாயிருத்தல் வேண்டும்,

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

சனி தவிர்ந்த ஏனையநாட்கள் நலந்தரும். உத்தியோக அநுகூலமும் கீர்த்தியும் எதிர்பார்க்கலாம். தொந்தரவுகள் பல நீங்கும். வார இறுதிநாளைக் கவனமாய்க் கழிக்கவும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

மற்ற வாரங்களிலும் கூடுதலான நன்மை தரக்கூடிய வாரம் இது. நண்பர்கள் மிகவும் உதவியாயிருப்பர், தொடக்கத்திலே எதிர்ப்பு நேரிட்டாலும் முயற்சிகளில் அநுகூலமடைவது கிச்சயம்.

## தாய் தடுத்தாலும் இனித் தமிழிலேதான்

1-ம் பக்கத்தொடர்ச்சி

இளங்கோ அடிகளின் சமரச சன்மார்க்கத்தை வியக்கிறேம். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரத்தில் காவியச் சுவையினை மாந்துகிறேம். காதல், கற்பு, வீரம், அரசியல், கலை முதலிய பல துறைகளிலும் பல செய்திகளை அறிந்து பெருமிதப்படுகிறேம். தமிழ் இசையின் பெருமையை எண்ணி எண்ணி வியக்கிறேம்.

இவைபோன்ற இன்னும் பல செய்திகளை நமக்கு நல்கும் செந்தமிழ்க் கருவூலமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகளைப் போற்ருதவர்கள் தம்மைத் தமிழர் என்று சொல்லுந் தகைமை உடையவர்களா? சிந்தித்துப் பாருங்கள்.

இளங்கோ அடிகளின் உள்ளம் மிகப் பரந்தது. உயர்ந்தது. அக்காலத்துச் சமய நிலைமையை நடுநிலையுடன் எடுத்து விளக்கியிருக்கின்ருர். சைவம், வைஷ்ணவம், சமணம் முதலிய மதங்களைப்பற்றிய பல செய்திகளை அவர் கூறியுள்ளார். தமிழ் நாட்டுக்கு முதன்முதலாக ஒரு பெருங் காப்பியத்தை நல்கியவர் அவர். தேவர்களையோ அரசர்களையோ காப்பியத் தலைவராக்காமல் ஒருபெண்ணைக் காப்பியத் தலைவியாக்கிக் குடிமக்களுக்குரிய காப்பியத்தை இயற்றியிருக்கிருர். திங்களைப் போற்றி அதன் கருணையைக் காட்டிக் காப்பியத்தைத் தொடங்கிய அடிகளார் மல்லன் மாஞாலத்து மக்கள் யாவருக்கும் அறிவுரை பகர்ந்து அதனை முடிக்கிருர். “யாதும் ஊரே யாவருங் கேளிர்” என்ற தமிழ்ப்பண்பை விளக்குகிருர். இத்தகைய பெரும் புலவர் திருநாளை ஆண்டுதோறும் சித்திரைப் பூரணையிற் கொண்டாட அன்பர்கள் முடிவு செய்துள்ளனர். இதனை யாவரும் ஏற்றுச் சிலப்பதிகாரத்தின் சிறப்பை எங்கும் பரப்ப முயல்வோம். வாழ்க இளங்கோ அடிகள்; வளர்க தமிழினம்.

## தூதுவரின் தூய தன்மை

1-ம் பக்கத் தொடர்ச்சி

றும் தவறவில்லை. இவர்கள் போன்ருரைக் கைப்புடைய காஞ்சிரங் கனிக்கு உவமானமாக்குவர் கச்சியப்பர்.

சூரபன்மனை அவர் காஞ்சிரங் கனியாகக் கண்டார்.

“உய்ந்தனர் தேன்மழை
உதவிப் போற்றினும்
கைத்திடல் தவிருமோ
காஞ்சிரங்கனி?”

என்று கேட்கிருர் கச்சியப்பர்.

வீரவாகுதேவரைச்சிறையிட நினைத்தான் சூரன் கண்ணபிரானைப் பொறிக்கிடங்கிடை வீழ்த்த நினைத்தான் துரியோதனன். இச்சூழ்ச்சிகளி லிருந்து தப்பத் துணிவு அவசியமாகின்றது. மேலும் உள்ளதை அஞ்சாமல் சபையில் எடுத்துக்கூறத் துணிவு வேண்டும்;

மேற்கூறியவற்ருல் தமிழகத்தில் தூதுவர்கள் எவ்வாறு பயன்பட்டார்கள் என்றும் தூதுவருக்கு அன்பு, அறிவு, சொல்வன்மை, துணிபு முதலிய குணங்கள் இருக்க வேண்டும் என்பதையும் கண்டோம்.





**யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி**

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
**616313,00**
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமாளுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்,

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள “நாஷனல்” வங்கியிலும் “இம்பீரியல்” வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும், தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாய்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன,

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும், முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்,
இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்

S. கனகசபை
Std. 14 20-11-46—20-11-49. சிருப்பர்.


# மொழிப் பிணக்கைத் தீர்ப்பதற்கு ஒற்றை ஆட்சி உதவாது

:O:

## யாவரும் இலங்கை மக்கள் என்ற எண்ணம் இருத்தல் வேண்டும்

(தமிழரசுக் கட்சிப் பாராளுமன்றத் தலைவர் திரு. *S. J. V.* செல்வநாயகம் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவின் சாரம்)

பல்வேறு சமுகங்கள் வாழ்ந்துவரும் பல்வேறு நாடுகளில் சமஷ்டி ஆட்சிமுறை வெற்றியளித்துள்ளது. சமஷ்டி எனபது நாட்டைப் பிரிப்பதாக அர்த்தப்படாது. வடக்கு கிழக்கு மாகாணங்களைக்கொண்ட தனிநாடு கோரியிருப்போமாளுல் அது நாட்டைப் பிரிப்பதாகுமெனக் கூறலாம். வாழு வாழவிடு என்பதுதான் சமஷ்டிக் கட்சியின் கொள்கை, சிறுபான்மையினரின் உரிமைகளை சமஷ்டி ஆட்சி அங்கீகரிப்பதாக இருக்கும்.

கனடாவில் பிரெஞ்சுச் சிறுபான்மையினரின் உரிமைகளைம் பாதுகாப்பதற்காக சமஷ்டிக்கொள்கை கொண்டுவரப்பட்டது. இலங்கையில் நாட்டின் அளவைக் கொண்டு பிணக்கு கிளம்பவில்லை, ஆளுல் மொழிப் பிணக்கு மூலம் மட்டுமே கிளம்பியுள்ளது.

1840-ம் ஆண்டில் கனடா பற்றி டர்காம் பிரபு சமர்ப்பித்த அறிக்கையைப் பற்றித் திரு. செல்வநாயகம் குறிப்பிட்டார் சமஷ்டி ஆட்சி முறையின்கீழ் மட்டுமே கனடா மக்கள் சந்தோஷமாக வாழ முடியுமென்பது இப்பொழுது உண்மையாகி விட்டது என்ருர்.

நாட்டைப் பிரிப்பதும் சமஷ்டி முறையும் எதிர் எதிரானது. நாட்டைத் துண்டுபோடுவசைத தவிர்க்கத்தான் சமஷ்டிக் கட்சி, சமஷ்டிக் கொள்கையைப் பரப்பியது, ஒற்றையாட்சி சோல்பரித் திட்டத்தைத் தமிழ் பேசும் மக்கள் வெறுக்கிருர்கள் என்பதில் எவ்வித தடையுமில்லை,

மார்ஷல் டிட்டோவின் காலத்திற்குமுன்பு யூகோஸ்லேவியா பெருப்பான்மைச் சமுதாயத்தினரால் ஆளப்பட்டு வந்தது. சமஷ்டி ஆட்சி முறையைக் கொண்டுவந்தன் மூலம் மார்ஷல் டிட்டோ தனது ராஜதந்திரத்தை வெளிகாட்டிவிட்டார். ஆறு இராச்சியங்களைக் கொண்ட சமஷ்டி நாடாக யூகோஸ்லேவியா விளங்குகின்றது.

சமஷ்டி ஆட்சி அமைப்புக்கு இலங்கை மிகவும் சிறிய நாடு என்று சிலர் வாதாடுகின்றனர். இலங்கையிலும் பார்க்க மூன்றில் இரண்டுமடங்கு சிறிய நாடான சுவிட்சர்லாந்து தேசத்தில் சமஷ்டி ஆட்சி முறை வெற்றிகரமாக நடைபெறுகிறது.

தமிழ் பேசும் பகுதிகளில் சிங்களம் பேசும் மக்களை குடியேற்றுவதைத் தமிழ் பேசும் மக்கள் ஆட்சேபிக்கின்றனர். கிழக்கு மாகாணத்தில் நிலங்கள் சிங்களம்பேசும் மக்களால் ஆக்கிரமிக்கப்படுகின்றது. இந்த விதத்தில் இன்னும் சிலகாலத்தில் கல்முனையும் மற்றும் தொகுதிகளும் தமிழ்ப் பிரதேசமாக இல்லாமற் போய்விடும்.

இந்த அநியாயம் பற்றி எதிர்க்கட்சியிலுள்ள பலகட்சிகள் கவனம் செலுத்துகின்றனர். இப்பொழுது சில காலமாக தமிழர்கள் தங்கள் இனம் அழிந்து விடுமோ என அஞ்சி அஞ்சி வாழ்கின்றனர்

சிறுபான்மையினர் தங்கள் தொடர்புகளை முழுவதுப் கத் துண்டித்துக் கொண்டாலும்கூட அதிகாரத்திலுள்ள கட்சி தங்கள் ஆட்சியைச் சிறுபான்மையினர் மீது திணிப்பதற்கு அவர்களுக்கு உரிமை கிடையாது.

இலங்கைக்குச் சுதந்திரம் கிடைத்தபோதே பெரும்பான்மைச் சமுகததவரின் அதிகார பீடை தமிழருக்குப் பீதியைக் கொடுதத்து. 1947 1952 ஆகிய சென்ற இரு பாராளுமன்றங்களிலும் அரசாங்கம் தமது மந்திரிசபையில் தமிழ் அங்கத்தினர்களைக் ‘காட்சிப் பொருளாக’ வைத்திருந்தது.

நிலைமை வரவர மோசமடைந்து வருகிறது. தமிழ் பேசும் 16 தொகுதிகளில் 10 தொகுதிகள் சமஷ்டி அங்கத்தவர்களைத் தெரிவு செய்தனுப்பியுள்ளது. தமிழ்ப் பேசும் மக்களின் கோரிக்கைகள் அரசியல் சட்ட ரீதியிலும், ராஜீய ரீதியிலும நியாயமான கோரிக்கை ஆகும். •

சிங்கள மக்களுடன் அமைதியாகவும் ஐக்கியமாகவும் தமிழ்ப் பேசும் மக்கள் வாழ்வதற்கும் தமிழ்ப்பேசும் மக்கள் நியாயம் பெறுவதற்கும உகந்தது சமஷ்டிக் கொள்கை தானென்பதை விரைவிலோ அல்லது சிறிது காலத்தின் பின்னரோ பாராளுமன்ற அங்கத்தவர்களும் மக்களும் உணர்ந்து கொள்வார்களென்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

## கல்வி மந்திரியார் கருத்து விளக்கம்

தமிழ் பேசும் பிள்ளைகள் சிங்களம் கற்கும்படி கட்டாயப்படுத்தப்பட மாட்டார்கள் என்று கல்வி எடுத்த கல்வி மந்திரியார், ஆனல் அவர்கள் அரசாங்க உத்தியோகம் பெறவிரும்பின் சிங்களம் படிக்க வேண்டுந்தானே என்ற அறுபல்லவியைத் தொடுத்தார்.

தமிழ் பேசும் பிள்ளைகளின் நன்மைக்காகத தமிழ் பேசும் ஆசிரியர்கள் சிங்களம் பயிலுதல் நன்றென்று சரணமும் விரித்தார்.

———

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் நாவலர் வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் அவர்களால் 11 5-56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.